بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருப்பெயரால்

# முஆத் இப்னு ஜபல் அறிவு மேம்பாட்டு மையம்

துறையூர் மெயின் ரோடு, காலனி-எருமப்பட்டி, நாமக்கல் மாவட்டம்-637013

## 2-ம் ஆண்டு கல்வி உதவித்தொகை (கல்வி ஆண்டு 2024-25)

**அஸ்ஸலாமு அலைக்கும்,**

அன்புள்ள மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு முஆத் இப்னு ஜபல் அறிவு மேம்பாட்டு மையத்தினுடைய ஸலாத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம். 2023-24-ம் கல்வியாண்டு முதல் 10 மற்றும் 12-ம் வகுப்பு படித்து முடித்து பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் கல்லூரி கல்விக் கட்டணம் கூட செலுத்த வசதியில்லா நிலையில், மேற்கொண்டு உயர்கல்வி படிக்க ஆர்வமும், திறமையும் உள்ள இரண்டு ஏழை முஸ்லிம் மாணவர்களுக்கு (ஆண்களுக்கு மட்டும்) அவர்களின் உயர் கல்விக் கனவு மற்றும் அவர்களின் இலக்குகளை எளிதாக நிறைவேற்ற உதவும் வகையில், அவர்களுக்குத் தேவையான கல்லூரி கட்டணத்தை செலுத்த எங்கள் மையத்தின் மூலம் உதவித்தொகை அளித்து வருகின்றோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆகையால், கல்வியாண்டு 2024-25-ல் இவ்வுதவித் தொகையினைப் பெறத் தேவையுடைய மாணவர்கள் அல்லது உங்களுக்கு தெரிந்த தகுதியுடைய மாணவர்களை கீழ்காணும் இணைப்பு / லிங்க் மூலம் விண்ணப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றோம். அல்லாஹ் இதன் மூலம் நம் அனைவர்களுக்கும் அருள் புரிவானாக!

- விண்ணப்ப இணைப்பு/லிங்க் https://www.mijkec.org/scholarship-higher-education-2024-entry/
- இத்திட்டத்தில் சேந்தமங்கலம், நாமக்கல், தொட்டியம், முசிறி & துறையூர் ஆகிய வட்டத்தைச் சேர்ந்த 10 & 12-ம் வகுப்பு முடித்த மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். தகுதியுடைய ஏழை மாணவர்களின் கல்லூரி படிப்பிற்காகவேண்டி கல்லூரிக்கட்டணம் செலுத்துவதற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.
- கல்லூரி விடுதிக்கட்டணத்திற்கு உதவித் தொகை வழங்கப்பட மாட்டாது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மாணவருக்கு அவரின் கல்லூரி படிப்பு முடியும் ஆண்டுகள் வரை கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்காக வேண்டி நபர் ஒன்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக ரூபாய் 60,000/- (அறுபது ஆயிரம்) மட்டுமே வழங்கப்படும்.
- 10 & 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் இரண்டு மாணவர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். முதல் பட்டதாரி மாணவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பட்டயப் படிப்பு (டிப்ளோமா) மற்றும் இளங்கலை (டிகிரி) படிப்புகளுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.
- உதவித் தொகை பெற, படிப்பு முடியும் வரை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெறும் பருவத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பம் பதிவு செய்வதற்கான கடைசி நாள்: 31' மே -2024.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் உரியவர்களிடம் 15 ஜூன் 2024 -க்கு முன்பு தெரிவிக்கப்படும்.

ஆன்லைனில் விண்ணப்பம் பதிவு செய்வதற்கு அருகில் இருக்கும் QR Code -ஐ ஸ்கேன் செய்யவும்!

Scan Me

மேலும் விபரங்களுக்கு:

ஹாஜா மைதீன் : +91 9585453370
ஷாஜஹான் : +91 9952244574

தொடர்புக்கு | www.mijkec.org | Contact@mijkec.org | தொடர்பு - முஆத் இப்னு ஜபல் (mijkec.org)